

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டியை பார்வையிட்டார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10,2025) தமிழ்நாட்டில் முதல்முறையாக சென்னை நேரு விளையாட்டு அரங்கில் கூடைப்பந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் சர்வதேச தரத்தில் பயிற்சி மேற்கொள்ளும் வகையில் 14.72 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள அதிநவீன தானியங்கி கூடைப்பந்து பயிற்சி இயந்திரத்தை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் அரசு அலுவலர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் உடனிருந்தனர்.




துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று (12.10.2025) சென்னை நேரு உள்விளையாட்டரங்கில் நடைபெற்ற 2025 முதலமைச்சர் கோப்பை இ–ஸ்போர்ட்ஸ் விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களுக்கு பதக்கம் அணிவித்து, மொத்தம் 9,75,000 க்கான பரிசுத் தொகை காசோலைகள், சான்றிதழ் மற்றும் வீரன் நினைவுச் சின்னம் வழங்கி பாராட்டினார். இதில் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ந.திலிப்குமார் தலைமை!

# திரு.வி.க.நகர் இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம்!

### கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.ராசா எம்.பி, சிறப்புரையாற்றினார்!



சென்னை,அக்.13

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், கொளத்தூர் மேற்கு பகுதியில், முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழாவை முன்னிட்டு "முப்பெரும் தொடர் 13" உழைப்பின் எழுச்சியே அன்பாலயம்! உடன்பிறப்பு வணங்கும் அறிவாலயம் எனும் தலைப்பில் கொளத்தூர், திரு. வி.க.நகர் இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் 12.10.25, ஞாயிற்றுக்கிழமை நேற்று மாலை 06.00 மணியளவில், சென்னை, ஜி.கே.எம்.காலனி, அரிச்சந்திரா மைதானத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில், கொளத்தூர் மேற்கு பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ந.திலிப்குமார் தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு, எ.நாகராசன் எம்.சி, ஐ.சி.எப்வ.முரளிதரன், செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, வானவில் விஜய் முன்னிலை வகித்தனர்.

எஸ்.தனசேகர், ஜெ.பாலமுருகன், பா.ஜெகதீஷ், க.வினோத், ஜி. ஜெ.பிரபு, ஆர்.டி.சங்கர் நானா, க.பிரசாத், ஜெ.மணிகண்டன், ப.ஸ்ரீதர்ராஜன், ஆர்.இளங்கோ, மு.தாவூத் உசேன், ஜீ.பிரபாகரன்(எ) பரத், ம.சரண்ராஜ், தி.நிர்மல், தி.கணேஷ், அ.கிளமேன்ட் சிரில், க.மோகன், அ.வினோத், ஜெ.ராஜப்பா, மு.சந்தானம், எஸ்.புவனேஷ், ரா.மணிகண்டன், ரா.விஜய், உ.விக்னேஷ், வி.டில்லிராஜ் வரவேற்றனர்.

கழக துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி,- என்றும் திராவிடம் வெல்லும் தத்துவம் எனும் தலைப்பிலும், திராவிட இயக்க எழுத்தாளர் திரு. வே.மதிமாறன் - இளஞ்சூரியர்களே எழுக எனும் தலைப்பிலும் கழக செய்தி தொடர்பு இணைச்செயலாளர் தமிழன் பிரசன்னா தியாகத்தில் எழுந்த திராவிடம் எனும் தலைப்பிலும் உரையாற்றினார்கள்.

மேலும் இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் மேயர் பிரியாராஜன், டாக்டர். கலாநிதிவீராசாமி எம்.பி, ப.தாயகம்கவி எம்.எல்.ஏ, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, என்.கிருஷ்ணமூர்த்தி, சி.மகேஷ்குமார், கே.சந்துரு, தேவஜவகர், புனிதவதிஎத்திராசன் எம்.சி, இசட்.ஆசாத் எம்.சி, சரிதா மகேஷ்குமார், எம்.சி, , பி.ஜெ.துளசிங்கம், லயன். பி.உதயசங்கர், நா.துலுக்காணம், இரா.வீரமணி, எம். பெரோஸ்கான், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், கா.ராஜ் முகமது, கே.எஸ்.இரவிச்சந்திரன், பி.கே.மூர்த்தி எம்.சி, கவிஞர் நன்மாறன் பொதுக்குழு உறுப்பினர்கள், கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார்கள்.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் எம்.டி. தமிழ்செல்வன், செ.முருகன் நன்றி கூறினார்கள்.



நீலகிரி கோத்தகிரி அரவேனு ஆல்பா ஜி.கே உயர்நிலைப் பள்ளியில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்ட முகாம் நடைபெற்றது. இம்முகாமினை தமிழ்நாடு அரசு தலைமை கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம்.ராஜு ஆகியோர் நேரில் பார்வையிட்டு பொதுமக்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சை முறைகளை மருத்துவர்களிடம் கேட்டறிந்தனர். இதில் கழக நிர்வாகிகள் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


